# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2009 / 2010 HELD IN DECEMBER – 2010

## COM 36 – COMPUTERIZED ACCOUNTING SYSTEM

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) கணக்கியல் முறைமையில் எந்தப் பகுதிகளில் spread sheet ஆனது பயன்படுத்த முடியும் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) Microsoft excel 2007 யில் எவ்வாறான சிறப்பம்சங்கள் உள்ளன

(05 புள்ளிகள்)

இ) பின்வருவனவற்றினை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குவதோடு அதற்கான சூத்திரத்தினையும் எழுதுக.

i. And,
ii. not
iii. or
iv. Days360
v. Networksdays

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

02. அ) பின்வருவனவற்றிற்கான சூத்திரத்தினை எழுதுக.

i) 2009ம் ஆண்டுக்கான மோட்டார் காருக்கான பெறுமானத் தேய்வினை கணிப்பிடுக.

| | | |
|---|---|---|
| மோட்டார் காரின் கிரயம் | ரூபா | 1,500,000.00 |
| இறுதிப் பெறுமதி | ரூபா. | 50,000.00 |
| ஆண்டுகள் | 10 | வருடம் |

ii) விற்பனை ரூபா 1000,000.00 க்கான 10% தரகினைக் கணிப்பிடுக.

iii) இலக்கம் 3 ஐயும் 4 ஐயும் கூட்டி விடையினை 4 இனால் பெருக்குதல்.

iv) இலக்கம் 7 அத்துடன் 8 என்பவற்றின் வர்க்கங்களின் கூட்டுத் தொகையினைக் கணிப்பிடுதல்.

v) Excel யில் **"if condition"** என்பதால் கருதுவது யாது? அதனை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஜுன் மாதம் வரையான காசுப்பாதீட்டினைத் தயாரிப்பதற்கான சூத்திரத்தினை Excel அடிப்படையாக வைத்து எழுதுக

எதிர்பார்க்கப்படும் விற்பனை அலகுகள் :

| NOV | DEC | JAN | FEB | MAR | APR | MAY | JUN |
|---|---|---|---|---|---|---|---|
| 2250 | 4500 | 2500 | 2570 | 3000 | 3500 | 4350 | 5350 |

அனைத்து அலகுகளும் ரூபா 500/- வீதம் விற்பனை செய்யப்படும்.

எல்லா விற்பனைகளும் கடன்அடிப்படையிலும் 50% விற்பனை ஒருமாத கடன் அடிப்படையிலும் மீதித் தொகை அடுத்துவரும் மாதத்தில் அறவிடப்படும்.

**கொள்வனவு :**

எதிர்பார்க்கப்படும் கொள்வனவுகள்

| NOV | DEC | JAN | FEB | MAR | APR | May | JUN |
|---|---|---|---|---|---|---|---|
| 4350 | 3000 | 4200 | 3300 | 5300 | 3250 | 2550 | 5250 |

எல்லா அலகுகளும் ரூபா 250/- வீதம் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படும். பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஒரு மாத்தின் பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

(15 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

03. அ) கணக்கியல் முறைமையினை கணனிமயப்படுத்த எடுக்க வேண்டிய படிமுறைகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) கணனிமயப் படுத்தப்பட்ட முறைமையின் அனுகூலங்களினை விளக்குக.

(05 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

04. அ) Sage line 50 Accounting version ஐப் பயன்படுத்தி அம்பாரை மாவட்டத்தில் வினியோக வியாபரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒன்றினை உருவாக்குவதற்கான படிமுறைகளை எழுதுக.

(10 புள்ளிகள்)

ஆ) பின்வருவனவற்றிற்கான படிமுறைகளை எழுதுக.

i) புதிய பேரேட்டுக் கணக்கினை உருவாக்குதல்

ii) ஒரு வாடிக்கையாளர் கணக்கினை உருவாக்குதல்

iii) ஒரு வினியோகத்தர் கணக்கினை உருவாக்குதல்

iv) ஒரு சரக்கிருப்பு கணக்கினை உருவாக்குதல்.

(10 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

05. Sage line 50 கணக்கியல் முறைமையில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான படிமுறைகளை எழுதுக.

i) Dec 01, 2010 யில் ஒரு வியாபார பங்குடமையாளர் ரூபா 2,000,000.00 பணத்துடன் வியாபாரத்தில் இணைத்துக் கொண்டார்.

ii) Dec 05, 2010 யில் HNB வங்கியில் ஒரு நடைமுறைக் கணக்கு தோற்றுவிக்கப்பட்டு ரூபா 50,000.00 வைப்பிலிடப்பட்டுள்ளது.

iii) Dec. 08. 2010 ல் 50 அலகு Mobile phone-Nokia4310 (Mob112) ரூபா 15000.00 வீதம் NIMAS and Co யிலிருந்து காசு அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

iv) Dec 10, 2010 யில் Peter Traders க்கு ரூபா 20,000 வீதம் 05 அலகு Mobile phone 4310 (Mob112) காசுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

v) Dec 15, 2010 யில் நிலையான 5 உதவி உத்தியோகத்தர்களை ரூபா 20,000/- மாதாந்த (8% EPF -Employee Contribution, 12% EPF and 3 %ETF -Company Contribution) அடிப்படையில் நியமித்துள்ளது.

vi) Dec 18 2010 யில் Peter நிறுவனமானது 5 அலகு Mobile phone களை திருப்பியனுப்பியுள்ளது.

vii) Dec 19, 2010 யில் காகிதாதிச் செலவுக்காக ரூபா 500,00 உம், கூலிக்காக ரூபா 800,00 உம் கொடுக்கப்பட்டுள்ளது.

viii) Dec 20,2010 யில் Plant and Machinery க்கு (2,000,000.00) 1% வீத மாதாந்த பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ix) Dec 20, 2010 யில் களஞ்சிய சாலையில் 2 அலகு Mobile Phone தொலைந்தமைக்கான செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

x) Dec 20, 2010 யில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மூன்றாம் தவணைக்கான VAT ரூபா 15000/- செலுத்தப்பட்டுள்ளது.

(20 புள்ளிகள்)

*****